# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# THIRD YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION AND COMMERCE (EXTERNAL) – 2006 / 2007

## Held in May 2007

## BBA / COM 37 (I) – AUDITING

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. தனியாள் கணனிகளை உற்பத்தி செய்வதற்காக 01 ஆகஸ்ட் 2000 த்தில் வரையறுத்த மைக்ரோ ஸொப்ற் லங்கா தனியார் நிறுவனம் உருவாக்கப்பட்டது. இயக்குனர்கள் வெளியக கணக்காய்வாளர்களுடன் அவர்களினுடைய தொடர்பு நிலையிலும் அவர்களது பொறுப்புத் தொடர்பாகவும் தீர்மானமில்லாது காணப்படுகின்றனர். கணக்காய்வு பங்காளி உங்களை வாடிக்கையாளரிடம் சென்று இயக்குனர்களுக்கு கம்பனியினுடைய கணக்களிப்பின் அதிகமான அடிப்படை அம்சங்களையும், கணக்காய்வாளர்களுடன் அவர்களுக்குள்ள தொடர்பினையம் விளக்கும்படி உம்மைக் கேட்கின்றார்.

**வேண்டப்படுவது:**

வரையறுத்த தனியார் மைக்ரோ ஸொப்ற் லங்கா நிறுவனத்தின் இயக்குனர்களுக்கு பின்வருவனவற்றை விளக்குக.

அ) ஏன் கணக்காய்வு அவசியம்?

(4 புள்ளிகள்)

ஆ) 1982 ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி எவ்வாறு ஒரு பொதுக் கம்பினியினுடைய கணக்காய்வாளர் நியமிக்கப்படுவார்?

(4 புள்ளிகள்)

இ) 1982 ம் ஆண்டின் 17 ம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி ஒரு கணக்காய்வாளரினுடைய உரிமைகள் என்ன?

(5 புள்ளிகள்)

ஈ) ஒரு கம்பனியினுடைய கணக்கியல் செயற்பாடு தொடர்பில் அக்கம்பனியினுடைய இயக்குனர்களுடைய பொறுப்புக்கள் யாவை?

(4 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

02. நீங்கள் நன்கு உருவாக்கப்பட்ட விற்பனைப் பிரிவுகளைக் கொண்ட பெரியளவிலான தளபாட உற்பத்திக் கம்பனியான தம்றோ நிறுவனத்தின் கணக்காய்வாளராகும்.

நடப்பாண்டு கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்னர், நீங்கள் விற்பனை, காசுப் பெறுவனவுகளின் சுற்றோட்ட கணக்காய்வு அணுகுமுறையினை மாற்ற விரும்புகிறீர். இம்மாற்றமானது உள்ளகக் கட்டுப்பாட்டில் ஆழ்ந்த அணுகுமுறையிலிருந்து நம்பகத் தன்மையானதாக (reliance) அதாவது நம்பகத் தன்மை அணுகுமுறையாக மாற்றப்பட வேண்டும். நீங்கள் உங்களது சிந்தனைகளை உமது கணக்காய்வு குழுவினுடைய வழிகாட்டிக் குறிப்பாக தயாரிப்பதற்கு தீர்மானித்துள்ளீர்கள்.

**வேண்டப்படுவது;**

(அ) விற்பனை, காசுப் பெறுவனவு சுற்றோட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் நம்பக முறைமையினைக் கண்டறிய நீங்கள் எதிர்பார்க்கும் உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கங்களை வரிசைப்படுத்துக.

(4 புள்ளிகள்)

(ஆ) மேலே (அ) யில் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்கங்களை அடையக்கூடிய விற்பனை, காசுப் பெறுவனவுகள் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் அதிகமான பொதுவான பண்புகளைக் குறிப்பிடுக.

(13 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

03. (அ) கணக்காய்வு ஆதாரம் என்பதனால் நிர் விளங்கிக் கொள்வது யாது? (03 புள்ளிகள்)

(ஆ) ஒரு கணக்காய்வாளரால் கணக்காய்வு ஆதாரங்களைத் திரட்டக்கூடிய ஐந்து முறைகளைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(இ) கணக்காய்விற்காக நிதிக்கூற்றொன்று உமக்கு வழங்கப்பட்டுள்ளது. கீழ்வரும் ஒவ்வொரு விடயத்தையும் கணக்காய்வு செய்வதற்குத் தேவையான கணக்காய்வு ஆதாரங்களை வரிசைப்படுத்துக.

(i) இயக்குனர் சம்பளம்
(ii) வங்கி மேலதிகப் பற்று
(iii) நீண்டகால முதலீடு
(iv) வியாபாரக் கடன்பட்டோர்

(12 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

04. ஒரு வினைத்திறன் வாய்ந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு கணக்காய்வு வேலைகள் கட்டாயம் திட்டமிடப்பட வேண்டும். இது இலங்கை கணக்காய்வு நியமம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ) கணக்காய்வுத் திட்டமிடல் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(2 புள்ளிகள்)

ஆ) கணக்காய்வு ஒன்றினைத் திட்டமிடும்போது ஒரு கணக்காய்வாளரினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை? விரிவாக விளக்குக.

(10 புள்ளிகள்)

இ) ஒரு கணக்காய்வு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டிய ஐந்து விடயங்களை விளக்குக.

(5 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

05. (அ) இலங்கை கணக்காய்வு நியமம் 26 இல் கூறப்பட்டுள்ள ஏழு அறிக்கையிடும் நியமங்களை விபரிக்குக.

(7 புள்ளிகள்)

ஆ) அந்நியமங்களில் ஒன்றை சுருக்கமாக விளக்குக.

(3 புள்ளிகள்)

இ) அறிக்கையிடும் நியமத்தின் முக்கியத்துவத்தை பரீட்சிக்க.

(7 புள்ளிகள்)

(மொத்தம் 17 புள்ளிகள்)

06. கீழ்வருவனவற்றை விளக்குக.

i. பொருண்மை
ii. பிரதிநிதித்துவக் கடிதம்
iii. ஆழ்ந்த பரிசோதனை
iv. கணக்காய்வு இடர்
v. அகக் கணக்காய்வு

(15 புள்ளிகள்)

****